## கோவிந்தனை நினை; கோவிந்தனை நினை

### பஜகோவிந்தம் - தமிழ் மொழியாக்கம்

கோவிந்தனை நினை, கோவிந்தனை நினை
ஆவிபிரிகையில் மூடா அருளுமோ இலக்கணம் !

(கோவிந்தனை நினை)

2 உளமார உடமைகளை உள்ளபடி கொண்டு
அளவற்ற பணத்தை அள்ளிவிட முயலாதே

(கோவிந்தனை நினை)

3 மோகத்தின் உணர்விலே மூழ்கிப் போகாதே
தேகத்தின் பாசாங்குத் தோற்றத்தில் மயங்காதே

(கோவிந்தனை நினை)

4 தாமரை இலையிலே தண்ணீரும் ஓடுமே
காமமும் நோயும் கர்வமும் அழித்திடுமே

(கோவிந்தனை நினை)

5 பணம் இருக்கும்வரை பந்தமும் தொடருமே
இனமும் வயதாக ஏளனம் செய்திடுமே

(கோவிந்தனை நினை)

6 உயிருடன் இருக்கையிலே உடலுக்கு மதிப்பே
உயிரும் நீங்கியதும் ஓடுவாரே மூலைக்கே

(கோவிந்தனை நினை)

7 விளையாட்டில் மழலை; விரசத்தில் இளமை
உளைநினைவில் முதுமை; ஓங்குமே பரப்பிரமமே

(கோவிந்தனை நினை)

8 யாரோ மனைவி? யாரோ மகன்?
எங்கிருந்து வந்தாய்? எங்கே போகிறாய்?

(கோவிந்தனை நினை )

9 நல்சேர்க்கை பற்றறுத்து  நவிலும் விடுதலையே
செல்மனம் அடங்கிட  செழிக்கும் முக்தியே

(கோவிந்தனை நினை)

10. நீரும் வற்றிடுமே  நிலையும் குலைந்திடுமே
ஊரும் ஒதுக்கிடுமே  உண்மை அதுவன்றோ!

(கோவிந்தனை நினை)

11.செல்வமும், இளமையும், சேர்க்கையும் சீக்கிரம்
சொல்லாது சென்றிடுமே சோர்வின்றி அதனால்..

(கோவிந்தனை நினை )

12.இரவும், பகலும், இருட்டும், ஒளியும்
உறவும் மாறினாலும்  உலராத ஆசையே
(கோவிந்தனை நினை )

13. பணமிருந்து  என்ன பயன் மூடனே!
குணமான சங்கமே குலத்தைக் காக்குமே
(கோவிந்தனை நினை)

14. துறவறம் பூணுதலும் தொழிலாய் மாறிடுமே
உறவை மீறியே உண்மையை உணர்ந்திடு
(கோவிந்தனை நினை )

15. முதுமை வழுக்கையிலும், மூடாத பொக்கையிலும்
பதுக்கிய வீரியமாய் பற்றுதல் தொடருமே
(கோவிந்தனை நினை)

16. குளிரில் நடுங்கியே, கூசாது தினமும்
வெளிச்சத்தில் வீணாய் உண்டிடும் பொம்மையே
(கோவிந்தனை நினை )

17. கங்கையில் மூழ்கலாம், காசினை தானமாக்கலாம்
பொங்கிடும் பிறப்பிலேதேடு  பொலிவான முக்தியை!
(கோவிந்தனை நினை)

18.மரத்தடி வாழ்வும் மான்தோல் உடையும்
உரமான தரையில் உறங்கும் துறவே
(கோவிந்தனை நினை )

19. யோகத்தில் மூழ்கலாம் போகத்தில் திளைக்கலாம்
சாகச வாழ்விலே  சாந்தத்தைத்  தேடிட
(கோவிந்தனை நினை )

20. கீதையின் சாரமும் கங்கையின் துளியும்
பாதை காட்டிடுமே பகவானின் நினைவே
(கோவிந்தனை நினை )

21.மறுபடி பிறப்பு மறுபடி இறப்பு
இருளான சம்சாரக் கடலிலே நீந்திட
(கோவிந்தனை நினை )

22 துறவிக்கில்லை பஞ்சம், துணியும் கந்தலே
உறவினை விட்டிட உள்ளுக்குள் ஆனந்தமே
(கோவிந்தனை நினை )

23. நீயாரோ நான்யாரோ நின்பெற்றவர் யாரோ
வாயார வாழ்த்திடு வையகம்  கனவே
(கோவிந்தனை நினை )

24. உன்னுள்ளும் என்னுள்ளும் உறையும் விஷ்ணுவே
முன்கோபம்  தவிப்பு முற்றிலும் மறந்திட...
(கோவிந்தனை நினை )

25 வீணாய் நேரத்தை விரயம் செய்யாதே
காணாத  உருவத்தில் கண்டிடு உன்னையே
(கோவிந்தனை நினை )

26 காமம், கோபம், கவர்ச்சி, பேராசை
சாமத்தில் உறங்காது  கண்விழி மூடா
(கோவிந்தனை நினை )

27 படித்திடு கீதையை, பார்த்தசாரதி பாதம்
பிடித்திடு, தானம்  பிறருக்கு கொடுத்திடு
(கோவிந்தனை நினை )

28 காமத்தின் வலையிலே கந்தலாகும் உடலே
ஏமாற்ற வாழ்விலே இறப்பு நிச்சயமே
(கோவிந்தனை நினை )

29 பணம் நிம்மதி பாரினில் தராதே
குணம் மாற்றுமே  குலமும் அஞ்சுமே
(கோவிந்தனை நினை )

30 மூச்சினை நேராக்கி முயற்சியில் சிந்தையடக்கி
பேச்சிலே இறைவன்  பெருமையை சொல்லிடு
(கோவிந்தனை நினை )

31. குருவின் சிஷ்யனே! குறையில்லா பயிற்சியில்
திருவடி பணிந்து திளைத்திடு கடலிலே
(கோவிந்தனை நினை )

32.  இலக்கணம் பார்க்காது இனிதாய் உரைத்திட
உலகிற்கு ஒளியும் சங்கரனால் கிட்டுமே
(கோவிந்தனை நினை )

33.  கோவிந்தனை நினை கோவிந்தனை நினை
ஆவிபிரிகையில் மூடா அருளுமோ இலக்கணம் !

ஹர ஹர சங்கர!  ஜெய ஜெய சங்கர!
ஹர ஹர சங்கர!  ஜெய ஜெய சங்கர!
பிழைகள் இருப்பின் அந்த கோவிந்தன் பொறுத்துக் கொள்வானாக !